தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

Tamil Study Centre, Homebush Inc.

Postal Address: P O Box 4019, Homebush NSW 2140

www.tsch.org.au info@tsch.org.au


# ஆண்டிறிதிப் பரீட்சை 2017

ஆண்டு: 10 திகதி: 25.11.2017

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்: திருமதி புவனேஸ்வரி புருஷோத்தமர்

மாணவர் பெயர்: ----------------------------------------------------

| வினாக்கள் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 15 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 20 | |
| வினா 6 | 08 | |
| வினா 7 | 12 | |

**வினா 1.பந்தியை வாசித்தபின் வினாக்களுக்கு விடை தருக** (25 புள்ளிகள்)

தமிழகத்தின் மாநில மரம் என்ற பெருமைக்குரியது பனை. இலங்கையில் யாழ்ப்பாணத்திலும் பிரதான மரம் பனையே. பனை நெடிது உயர்ந்து வளரும் மரமாகும். அதற்குத் தண்ணீர் உற்றி வளர்ப்பார் யாருமில்லை. மழைக்காலத்தில் விதையிட்டால் தானாகவே வளர்ந்து பயன் தரும் மரமாகும்.

ஆண்பனை, பெண்பனை என்று வகைப்படுத்தப்பட்டிருக்கும். பனை மரத்தில் 12 உறுப்புக்கள் உள்ளது என்று குறிப்பிடுவர். அவையாவன வேர், தூர்ப்பகுதி, நடுமரம், பத்தை மட்டை, உச்சிப்பகுதி, ஓலை, சில்லாட்டை, பாளை, நுங்கு-பனங்காய், பச்சைமட்டை, சாரை ஓலை, குருத்தோலை என்பன ஆகும். இந்த உறுப்புக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயனைத் தரவல்லவை. பனையிலிருந்து பெறும் பயன் மிக ஏராளம். இதனால் தான் பனைக்கு "கற்பக விருட்சம்","கற்பக தரு" என்று நம் முன்னோர்கள் பெயரிட்டனர். நமது பழைய இலக்கியங்கள்யாவும் சுவடிகளிலேயே எழுதப்பட்டன. சுவடிகள்(ஏடுகள்) யாவும் பனை ஓலையால் ஆனவை என்பதை மறந்து விட முடியாது.

பனையிலிருந்து கிடைக்கும் பதநீர் ஆரோக்கியமான பானம். இது மிகவும் இனிப்பான சாறு. இதனை இயல்பாகப் புளிக்கவிட்டால் (நொதிக்க விட்டால) அது "கள்" எனப்படும். பனையிலிருந்து பெறப்படும் இனிப்பான சாற்றைச் சுண்ணாம்பின் துணை கொண்டு புளிக்கவிடாமல் செய்து பெறப்படுவதே பதநீர். பதநீரிலிருந்து பனங்கட்டி, பனங் கற்கண்டு, பனம்பாணி (Syrub) என்பன தயாரிக்கப்பட்டு தமிழர் உணவுப் பழக்கத்தில் ஆரோக்கிய இடத்தை பெற்றிருந்தன.

நுங்கு பனங்காய் பனங்கிழங்கு என்பன சுவை மிக்க உணவுகள். பனங்காயிலிருந்து பனாட்டு, பனங்காய்ப் பணியாரம் செய்து உண்ட நினைவு நாவில் நீர் சுரக்க வைக்கின்றது. பனங்கிழங்கிலிருந்து துவையலும், ஒடியல் பிட்டும், ஒடியல் கூழும் இன்றும் நம்மவர் மத்தியில் முற்றாக மறையவில்லை. ஆரோக்கியம் நிறைந்த நார்ச்சத்து மலிந்த உணவுகள் இவை என்பதை நினைவில் நிறுத்தவேண்டும்.

பனை ஓலை ஆடு மாடுகளுக்கு உணவாவதோடு, வீட்டுக்கூரை வேயவும், வேலி அடைக்கவும் உதவின. குருந்து ஓலையைக் காயவைத்து பெட்டி, பாய், கூடை பின்னி எடுத்தார்கள். இழைத்து எடுத்தல் பெரு வேலையாகி வருமானம் கொடுத்தது. பனையில் நடுமரம் வீடுகட்டவும், கூரை அமைக்கவும் தூண்கள் கட்டவும் உதவியது. பனையின் கழிவுகள் யாவும் மட்டை, பன்னாடை, கொக்கரை, காவோலை எல்லாம் விறகாகப் பயன்படுத்தப்பட்டன. முழுப்பனையும் வாழ்ந்தாலும் சாய்ந்தாலும் பயன்பட்டது. உணவாக, மருந்தாக, வீட்டுப் பொருளாக , கலைப் பொருளாக எல்லாம் பனை பயன் படுகிறது.

இன்றைய தலைமுறைக் குழந்தைகள் பலர் நுங்கையே சுவைத்திருக்கவில்லை. பனை ஓலையில் காற்றாடி செய்து பார்க்கவில்லை. பதநீர்ப் பண்டங்களையும் காணவில்லை. தமிழ்ச் சமூகத்தின் உயிர் சாட்சியாக விளங்கும் பனை மரங்கள் பெருவாரியாக வெட்டி அழிக்கப்படுகின்றன. அதனால் பனைமரத்தைச் சார்ந்து வாழும் பனங்காடை பனை உழுவான் போன்ற பறவைகளும் வாழிட அழிவைச் சந்திக்கின்றன. பனையைப் பேணி நம் பண்பாட்டு அம்சங்களைக் காப்போம்.

1. பனை எங்கெங்கு முக்கியமான மரமாக விளங்குகிறது? (2 புள்ளி)

2. பனைக்கு "கற்பக விருட்சம்" என்று நம் முன்னோர்கள் பெயரிட்டமைக்கு காரணம் என்ன? (3 புள்ளி)

3. பதநீருக்கும் கள்ளுக்கும் உள்ள வேறுபாட்டை அறிந்தீரா? அவற்றைக் கூறுக.

4. பனையிலிருந்து பெறும் சாறு, பனங்காய் கொண்டு தயாரிக்கப்பட்ட 8 உணவுப் பொருட்களைப் பட்டியலிடுக. (4 புள்ளி)

5. பனைமரத்தை எவற்றுக் கெல்லாம் பயன்படுத்தினார்கள். (3 புள்ளி)

6. பனையின் கழிவுகள் யாவை" அவை எதற்குப் பயன் பட்டன.

7. இன்றைய தலைமுறையைக் குழந்தைகள் எவற்றையெல்லாம் அனுபவிக்கவில்லை என இப்பந்தியில் கண்டீர்? (3 புள்ளி)

8. இப்பந்தியை வாசித்தபின் உமக்கு உண்டான உணர்வு, ஆச்சரியம், ஆதங்கம் என்பவற்றை விளக்குக. (5 புள்ளி)

**வினா2 பின்வரும் கவிதையை வாசித்து விடை எழுதுக** (10 புள்ளிகள்)

ஆக்கம் வேண்டுமெனில் –நன்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டுமப்பா –ஓயாது
உழைக்க வேண்டுமப்பா

உண்ணும் உணவுக்கும்- இடுப்பில்
உடுக்கும் ஆடைக்கும்
மண்ணில் அந்நியரை நம்பி
வாழ்தல் வாழ்வாமோ?

உண்ணும் உணவுக்கு ஏங்காமல்
உடுக்கும் ஆடைக்கும் அலையாமல்
பண்ணும் தொழில்கள் பலகாண்போம்
பஞ்சப் பேயைத் துரத்திடுவோம்
அண்ணல் காந்திவழி பற்றி
அகிலம் புகழ வாந்திடுவோம்
(கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை)

1. நன்மை அடைய வேண்டுமானால் எவை வேண்டும் என்று கவிமணி கூறுகிறார்? (2 புள்ளி)

________________________________________

________________________________________

________________________________________

2. எவற்றுக்கு அந் நியரை நம்பி வாழக்கூடாது என்றார் ? (2 புள்ளி)

________________________________________

________________________________________

________________________________________

3. எப்படி நாம் வாழவேண்டும் என்ன காணவேண்டும் என்று கவிமணி கூறுகிறார்?

(6 புள்ளிகள்)

**வினா3. கீழே தரப்படும் குறிப்புகளைக் கொண்டு 150 சொற்களுக்கு அமைவாக 2-3 பந்திகள் எழுதுக** (15 புள்ளிகள்)

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

- 20 ம் நூற்றாண்டில் இணையற்ற தமிழ்க் கவிஞர்களில் ஒருவர்
- பிறப்பு: 1877 ஜுலை 27
- மறைவு:1954 செப்ரெம்மர்26
- பிறந்த ஊர்: தமிழ்நாடு கன்னியாகுமரி மாவட்டம் தேரூர்
- பெற்றோர்: சிவதாணுப்பிள்ளை, ஆதிலட்சுமி
- கல்வி: தேரூரில் ஆரம்பக்கல்வி

  திருவாவடுதுறை மடத்தலைவர் ,சாந்த லிங்கத் தம்பிரானிடம் தமிழ் இலக்கியம், இலக்கணம்.

  முது மாணிப் பட்டம் (MA)

- ஆசிரியப்பணி: 36 ஆண்டுகள்

  நாகர் கோயில் கோட்டாறு ஆரம்பப்பள்ளி

  நாகர் கோயில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி

  திருவனந்தபுரம் பெண்கள் கல்லூரி

- திருமணம்: 1901ல் மனைவி பெயர் உமையம்மை
- கவிதைகள்: தமிழில் குழந்தைகளுக்கான முதன் முதலில் தொடர்ச்சியாகப் பாடல்கள் எழுதியவர்

  1938ல் வெளியான "மலரும் மாலையும்" தொகுதியில் 25க்கு மேற்பட்ட குழந்தைப் பாடல்களும் 7 கதைப் பாடல்களும்.

  ஆசியஜோதி, உமர் காயம் பாடல்கள், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம், அழகம்மை ஆசிரியர் விருத்தம்

- இசைப்பாடல்கள்: "தேவியின் கீர்த்தனங்கள்" இசைப் பாடல் தொகுப்பு

  இசைக்கலைஞர்கள் பல மேடைகளில் பாடுஇன்றார்கள்

- கௌரவிப்பு: 1940 டிசம்பர் 24 –சென்னைத் தமிழ்ச்சங்கம் "கவிமணி" என்று பட்டமளித்தது.

- பன்முகம்: குழந்தைக் கவிஞர், தேசியக் கவிஞர், விடுதலைக் கவிஞர், சமுதாயக் கவிஞர், என்று போற்றப்பட்டது.
- மணமகள், தாயுள்ளம், வேலைக்காரன், கள்வனின் காதலி பைத்தியக்காரன், கண்ணின் மணிகள் ஆகிய திரைப் படங்களில் இவரது பாடல்கள் பயன்படுத்தப்பட்டன
- நினைவு நிலையம்: 1954ல் தேரூரில்
- தபால் முத்திரை வெளியீடு: 2005ல்

**வினா 4: உமது தமிழ்க்கல்வி நிலையத்தின் வருடாந்தக் கலைவிழாவுக்கான அழைபிதழ் ஒன்று எழுதுக.**(75 சொற்கள்)

காலம்: 2018 மார்ச் மாதம் 22ம் திகதி

நேரம்: 3:30 மணி பிற்பகல்

**வினா 5: கட்டுரை எழுதுதல்** (20 புள்ளிகள்)

1.உமது பாடசாலைக் கல்விச் சுற்றுலாவின் போது நீர் புதிதாக அறிந்து கொண்டவை, உமக்கு ஆர்வமூட்டியவை, ஆச்சரியம் தந்தவை, பெற்றுக்கொண்ட பயிற்சிகள், நண்பர்களின் அனுபவம் என்பவற்றை வெளிப்படுத்தி மூன்று நாட்களுக்குத் தினக்குறிப்பேட்டுப் பதிவை எழுதுக.

2.தமிழ் வளர்த்த சான்றோர் வரிசையில் உம்மைக் கவர்ந்த ஒருவரைப் பற்றித் தமிழ்த் தகவல் தினத்தில் ஆற்றவுள்ள பேச்சை உரைவடிவில் எழுதுக.

3. தொழில் நுட்பத்தின் முன்னேற்றம் சமூகத் தொடர்புச் சாதனங்களான சமூக ஊடகங்களை மிகுதியாக வளர்த்துவிட்டது. மாணவர்களுக்கு இந்த முன்னேற்றம் அளிக்கின்ற சாதகமான பாதகமான விளைவுகளை மதிப்பீடு செய்து கட்டுரை எழுதுக.

வினா 6 கேட்டுக் கிரகித்தலும் விடையளித்தலும்

பனுவல் 1 (8 புள்ளி)

1.இந்த உரையாடலில் பங்கு கொண்டவர்கள் யாவர்?

2.இருவரும் யாரைப் பற்றிக் கதைக்கின்றார்கள் (1 புள்ளி)

3.உரையாடலில் பங்கு கொண்ட பெண் என்ன உதவி கேட்கின்றார்?

4.அவர் கூறிய செய்தி என்ன ? (3 புள்ளி)

**வினா 7: பனுவல் 2** (12 புள்ளி)

1. அரசன் எங்கு செல்லப் போகிறார்? அவர் கூறிய வீரவசனம் என்ன ?(3 புள்ளி)

2. அரசி அரசனிடம் தெரிவித்த விருப்பம் என்ன? (1 புள்ளி)

3. அரசன் அரசியின் விருப்பத்தை ஏற்றாரா? அரசன் கூறிய விளக்கம் என்ன? (3 புள்ளி)

4. அரசி இறுதியாக என்ன கூறினார்? (4 புள்ளி)

5. இவ்வுரையாடலில் இருந்து நீர் அறிந்துகொண்டவற்றை எழுதுக. ( 3 புள்ளி)